**இராணிப்பேட்டை நகராட்சி**

**2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை :- தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்**

| மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 30.11.2018 | **பொருள் எண். 3014**<br><br>இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் நவம்பர் 2018 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**(ந.க.எண். 1308/2015/சி1)** | நகரமன்றத் திர்மானம் எண்.3014 அனுமதிக்கப்படுகிறது |
| 30.11.2018 | **பொருள் எண்.3015**<br>இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் நவம்பர் 2018 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**(ந.க.எண். 675/2015/இ1)** | நகரமன்றத் திர்மானம் எண்.3015 அனுமதிக்கப்படுகிறது |
| 30.11.2018 | **பொருள் எண்.3016**<br>இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு கீழ்கண்ட விவரப்படி வாகனங்கள் வாங்கி உபயோகப்படுத்தவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.34.60 இலட்சத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. | நகரமன்றத் திர்மானம் எண்.3016 அனுமதிக்கப்படுகிறது |

**பணியின் விவரம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | Purchase of Battery Operated Vehicle | 13 Nos | Rs. 23.40 lakhs |
| 2 | Purchase of Light Commercial Vehicle 2.0 cum capacity | 2 Nos | Rs. 11.20 lakhs |
| | | **15 Nos** | **Rs. 34.60 lakhs** |

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதி அளிக்கலாம் .
2) மேற்படி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்போகும் பணிகளுக்கு உரிய நிர்வாக அனுமதி பெற்றிட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பி நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண். 2591/2018/இ1)**

| | | |
|---|---|---|
| 30.11.2018 | <u>பொருள் எண்.3017</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 30 வரையிலான பகுதிகளில் 2165 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி அனைத்து தெருவிளக்குகளினாலும் ஏற்படும் மின்சார பயனீட்டை வரன்முறைப்படுத்தி நகராட்சிக்கு ஏற்படும் மின்கட்டண செலவினை பெருமளவு குறைப்பதற்காகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் அனைத்து தெருவிளக்குகளின் விவரங்களையும் நேரில் கள ஆய்வு செய்து அதற்கான விரிவான திட்ட அறிக்கை (Investment Grade Auditing of Street Lighting System and Preparing DPR for Implementing Energy Saving Measures) தயார் செய்திட M/s.Active Energy OPC Private Limited, Chennai என்கிற நிறுவனத்திற்கு பணி ஒப்படைக்கப்பட்டது. தற்போது மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர் அவர்களிடமிருந்து ந.க.எண். 2059/2017/பி1 நாள் 31.08.2018–ல் வரப்பெற்றுள்ள கடிதத்தில் குறிப்பட்டுள்ளபடி மேற்படி பணியினை மேற்கொண்ட நிறுவனத்திற்கு ஆகும் செலவினத்தை ( 40%) நகராட்சி மூலம் (Municipal Contribution) செலுத்துவதற்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்காகும் செலவினத்தை The Regional Director of Municipal Administration, Vellore அவர்களுக்கு வங்கி வரைவோலையாக செலுத்திட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம் .<br>3) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 2974 /2018/இ1)** | நகரமன்றத் திர்மானம் எண்.3017 அனுமதிக்கப்படுகிறது |
| 30.11.2018 | <u>பொருள் எண்.3018</u><br>இந்நகராட்சியில் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை, வேலூர் அவர்களுக்கு 2017–2018 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் தணிக்கை கட்டணம் ரூ.79986/– செலுத்த வேண்டும் என உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை, வேலூர் அவர்கள் தெரிவித்துள்ளதின்படி மேற்கண்ட தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ரூ.79986/–னை பொது நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுதிக்கலாம்.<br>3) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | நகரமன்றத் திர்மானம் எண்.3018 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 30.11.2018 | <u>**பொருள் எண்.3019**</u><br>இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சிக்கு சொந்தமான சாலை, பாட்டை பகுதிகள், நகராட்சி இடங்கள், நகராட்சி பேருந்து நிலையம், தாய் சேய் நலவிடுதி, நகராட்சி பள்ளி கட்டிடங்கள், பூங்காக்கள், நீர் தேக்கத் தொட்டிகள், நகராட்சி அலுவலகம், நகராட்சி சுடுகாடுகள், நகராட்சி பொதுக்கழிப்பிடங்கள், நகராட்சிக்கு சொந்தமான அனைத்து இடங்கள் மற்றும் அரசு சார்ந்த கட்டிடங்கள், பள்ளி கட்டிடங்கள், நீர் நிலை அமைப்புகள் மேலும் அரசு சார்ந்த அனைத்து அலுவலக கட்டிடங்களும் நகராட்சி வரைபடத்தில் (Town Map) GIs முறையில் பதிவிட வேண்டியுள்ளதால் GIS அமைப்பின் படி நகரமமைப்பு வரைபடத்தில் பதிவுகள் மேற்கொள்ளவும் மேற்படி பணிக்காக விலைப்புள்ளிகள் கோரவும் உத்தேச பணிக்கு ரூ.3.50 இலட்சத்திற்கு மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>**அலுவலக குறிப்பு**</u><br>மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>**(ந.க.எண். 2790/2018/ எப்1)** | நகரமன்றத் திர்மானம்<br>எண்.3019<br>அனுமதிக்கப்படுகிறது |
| 30.11.2018 | <u>**பொருள் எண்.3020**</u><br>இராணிப்பேட்டை நகராட்சி Day – NULM திட்டத்தில் சாலையோர வியாபாரிகளை ஒழுங்குப்படுத்துதல் சம்மந்தமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதங்களின்படி மேற்படி திட்டத்திற்கான கடை நடத்துவதற்காக தேர்வு செய்யப்பட்ட இடங்களுக்குண்டான Project Report மற்றும் Power Point தயாரித்து வழங்கிட கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள்.<br><br>1) M/s. Rams Acadamy ( Rajagopal st Kpm) - 79060.00<br>2) M/s. Biztrace Bangalore - 82600.00<br>3) M/s. Sansara – Vallal Pachaiyappan St, Kanchipuram- 75000.00<br><br>மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் M/s. Sansara Vallal Pachaiyappan St Kanchipuram அவர்களின் குறைந்த விலைப்புள்ளி தந்துள்ளதால் அன்னாரின் விலைப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு**</u><br>1) குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s. Sansara காஞ்சிபுரம் அவர்களின் விலைப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்கலாம்.<br>2) அவசரம் அவசியம் கருதி பணியினை உடன் மேற்கொள்ள மேற்படி நிறுவனத்திற்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று செயல்முறை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>**(ந.க.எண். 4030/2016/எப்1)** | நகரமன்றத் திர்மானம்<br>எண்.3020<br>அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 30.11.2018 | **<u>பொருள் எண்.3021</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சி Day – NULM திட்டத்தில் சாலையோர வியாபாரிகளை ஒழுங்குப்படுத்துதல் சம்மந்தமாக M/s.மாங்காடு காமாட்சியம்மன் நிறுவனம் மூலம் Bio –Metric மூலம் தேர்வு செய்யப்பட்டு வியாபாரிகளுக்கு உத்தேச கடை நடத்துவதற்கு இடங்களை தேர்வு செய்து அதற்கான Project Report , Power Point மற்றும் DIP தயாரித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு வழங்க வேண்யுள்ளதால் விலைப்புள்ளிகளை பெற்றுக்கொள்ளவும் மேற்படி திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலேயே செலவினங்கள் மேற்கொள்ளவும் தோராய செலவினம் ரூ.80,000/–க்கு மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது .<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2) அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதற்கும் அனுமதி வழங்கலாம்.<br>**(ந.க.எண். 4030/2016/எப்1)** | நகரமன்றத் திர்மானம் எண்.3021 அனுமதிக்கப்படுகிறது |
| 30.11.2018 | **<u>பொருள் எண்.3022</u>**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TN73D8573 எண்கொண்ட டம்பர் பிளேசர் வாகனத்தின் பின்பக்க டயர்கள் நான்கும் பழுதடைந்துவிட்டதால் புதியதாக நான்கு டயர்கள் மாற்றவும் பணியினை மேற்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.45,000/-க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி இந்நகராட்சி ஆணையர்(பொ) மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர்நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2732**/2018/எச்1) | நகரமன்றத் திர்மானம் எண்.3022 அனுமதிக்கப்படுகிறது |

30.11.2018

**<u>பொருள் எண். 3023</u>**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கிவரும் TN73D8573 எண்கொண்ட டம்பர் பிளேசர் வாகனத்திற்கு பழுதடைந்த நான்கு பின்பக்க டயர்கள் புதியதாக வாங்கி பொருத்துவதற்கு நகரமன்ற தீர்மானம் எண்.3023 நாள்: 30.11.2018 அனுமதி அளித்ததின்பேரில் 19.11.2018 ஆம் தேதி அன்று கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | நிறுவனம் மற்றும் முகவரி | விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | A.V.TYRES MRF TYRES AND SERVICE<br>No.36,D/1, M.B.T. Road, Muthukadai, Ranipet | ரூ.40,500/- |
| 2. | BALAMURUGAN TYRES<br>No.136E/2, M.B.T. Road, Navalpur, Ranipet | ரூ.43,600/- |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1.மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை 1-ல் A.V.TYRES MRF TYRES AND SERVICE அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

3. அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2732/2018/எச்1)**

நகரமன்றத் திர்மானம் எண்.3023 அனுமதிக்கப்படுகிறது

30.11.2018

**<u>பொருள் எண்.3024</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TN23V4587 எண் கொண்ட மினிலாரி வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு மேற்படி வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண். 2927 நாள் 30.07.2018 அனுமதி அளித்ததின்பேரில் 31.10.2018–ஆம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதின் பேரில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

நகரமன்றத் திர்மானம் எண்.3024 அனுமதிக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| | <br>\| வ.எண் \| நிறுவனம் மற்றும் முகவரி \| விலை விகிதம் \|<br>\| 1 \| PRADEEP AUTO WORKS No.44, 45 New Bye Pass Road (Near Railway Gate) Vellore- 632 004 \| ரூ.1,49,260/– \|<br>\| 2 \| SRI MUNIRATHINAM AUTO MOBILES No.32, 1st East Main Road, Gandhi Nagar, Vellore – 06. \| ரூ.1,68,490/– \| | |

| வ.எண் | நிறுவனம் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | PRADEEP AUTO WORKS<br>No.44, 45 New Bye Pass Road (Near Railway Gate) Vellore- 632 004 | ரூ.1,49,260/– |
| 2 | SRI MUNIRATHINAM AUTO MOBILES<br>No.32, 1st East Main Road, Gandhi Nagar, Vellore – 06. | ரூ.1,68,490/– |

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் PRADEEP AUTO WORKS அளித்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மற்றும் அதற்கான தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1278/2018/எச்1)**

| 30.11.2018 | **பொருள் எண்.3025**<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TN73D8588 எண் கொண்ட டம்பர் பிளேசர் வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு மேற்படி வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண். 2926 நாள் 30.07.2018 அனுமதி அளித்ததின்பேரில் 31.10.2018–ஆம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதின் பேரில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | நகரமன்றத் திர்மானம் எண்.3025 அனுமதிக்கப்படுகிறது |
|---|---|---|

| வ.எண் | நிறுவனம் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | PRADEEP AUTO WORKS<br><br>No.44, 45 New Bye Pass Road (Near Railway Gate) Vellore- 632 004 | ரூ.1,12,510/– |
| 2 | SRI MUNIRATHINAM AUTO MOBILES<br><br>No.32, 1st East Main Road, Gandhi Nagar, Vellore – 06. | ரூ.1,22,370/– |
| 3 | SRI BALAMURUGAN AUTO MOBILE<br><br>New Bye Pass Collectorate Road, Vellore 632 004 | ரூ.1,22,436/– |

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் PRADEEP AUTO WORKS அளித்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மற்றும் அதற்கான தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2122/2018/எச்1)**

| | | |
|---|---|---|
| 30.11.2018 | <u>**பொருள் எண்.3026**</u><br>இந்நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்த திரு.த.குமாரசாமி என்பவர் கடந்த 31.10.2018 அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். அன்னாரின் சிறப்பு சேமநல நிதி தொகை வட்டியுடன் வழங்குமாறு தனது மனுவில் கோரியுள்ளார். திரு.த.குமாரசாமி, வருவாய் உதவியாளர் அவர்களின் சிறப்பு சேமநலநிதி தொகையில் ரூ.5960/-ம் மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.10,000/-ஐ பொதுநிதியிலும் ஆக மொத்தம் ரூ.15960/-ஐ வழங்க மன்றத்தின் | நகரமன்றத் திர்மானம் எண்.3026 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2842/2018/பி2)** | |
| 30.11.2018 | <u>பொருள் எண்.3027</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 30 வரையிலான பகுதிகளில் அமைந்துள்ள நகராட்சிக்குச் சொந்தமான சிறுமின்விசை பம்புகளின் சின்டெக்ஸ் தொட்டிகளின் மேற்புறத்தில் உள்ள மூடிகள் இல்லாத நிலையில் உள்ளதை கண்டறிந்து மூடிகள் பொருத்தி பராமரித்திடவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.1,50,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண்.2824/2018/இ1)** | நகரமன்றத் திர்மானம் எண்.3027 அனுமதிக்கப்படுகிறது |
| 30.11.2018 | <u>பொருள் எண்.3028</u><br>இந்நகராட்சிக்குச் சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு குளோரினேஷன் செய்திட மின்மோட்டார்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி குளோரினேஷன் செய்யும் பணிக்கு தேவையான Stand by Pump -2 எண்ணிக்கை மற்றும் Cwss Stand by Pump -1 எண்ணிக்கை வாங்குவதற்கும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.5,00,000/–ற்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண்.2823/2018/இ1)** | நகரமன்றத் திர்மானம் எண்.3028 அனுமதிக்கப்படுகிறது |
| 30.11.2018 | <u>பொருள் எண்.3029</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சீனிவாசன்பேட்டை பகுதியில் (எம்.பி.டி. ரோடு) அமைந்துள்ள நகராட்சிக்குச் சொந்தமான குப்பை கொட்டும் இடத்தில் உள்ள குப்பையினை Bio Mining செய்து அகற்றிடும் பணியினை ( SBM – Solid Waste Management - Bio Mining Project for Removing legacy waste by Ranipet Municipality) உரிய கலந்தாலோசகர் மூலம் மேற்கொள்வதற்கும் அதற்காகும் செலவினம் ரூ.1,77,000/–குறித்து ( ரூ.1,50,000/–+ 27000/– (Gst 18%) Director, Centre for Environment studies, Anna University, Chennai அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் எண். CES/DIR/Ranipettai | நகரமன்றத் திர்மானம் எண்.3029 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | Municipality / 2018–2019 நாள் 09.11.2018–ன்படி மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தை வங்கி வரைவோலையாக செலுத்தி மேற்படி பணியினை மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்காகும் செலவினத்தை SBM- Solid Waste Management திட்ட நிதியின் கீழோ அல்லது நகராட்சி பொதுநிதியின் கீழோ மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண்.2825/2018/இ1)** | |
| 30.11.2018 | **<u>பொருள் எண்.3030</u>**<br>இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் குப்பை அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் டிப்பர் ஆட்டோ வாகன எண். TN23AX3098 வண்டிக்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு<br>1) பசுமை வரி – 600/–<br>2) தகுதிச்சான்று கட்டணம் – 850/–<br>3) புகை மற்றும் ரிபெல்ட் கட்ணம் – 380/–<br>----------<br>ரூ.1830/–<br>----------<br>செலுத்த கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகை ரூ.1830/–யை செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பொதுசுகாதாரம் மற்றும் நிர்வாக நலன் கருதி அவசிய அத்தியாவசியத்தை முன்னிட்டு மேற்படி தொகை ரூ.1830/– செலுத்தப்பட்டதற்கும் இந்நகராட்சி பொது நிதியிலிருந்து தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2801/2018/எச்1)** | நகரமன்றத் திர்மானம் எண்.3030 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 30.11.2018 | **பொருள் எண்.3031**<br><br>இந்நகராட்சிக்கு சொந்தமான எம்.பி.டி ரோடு முதல் மாடி கடை எண். 10,11 மற்றும் 12 ஆகிய கடைகளுக்கு 28.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொதுஏலம் கோரப்பட்டது. மேற்கண்ட கடைகளுக்கு அன்றைய தினம் ஒப்பந்தப்புள்ளி யாரும் கோரவில்லை. மேலும், பொதுஏலம் கேட்கப்பட்டதில் கீழ்கண்ட கடைகளுக்கு மட்டும் ஏலத்தில் கலந்து கொண்டு உயர்ந்த ஏலக்கேள்வியினை கேட்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | நகரமன்றத் திர்மானம் எண்.3031 அனுமதிக்கப்படுகிறது |

| வ.எண். | கடையின் விவரம் கடை எண். | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் பெயர் | கேட்கப்பட்ட உயர்ந்த ஏலக் கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1 | எம்.பி.டி ரோடு முதல் மாடி கடை எண். 10 | 1.க.ராமச்சந்திரன்<br>2.து.முகமதுஷாபுதீன் | ரூ.2800/–<br>ரூ. 2700/– |
| 2 | எம்.பி.டி ரோடு முதல் மாடி கடை எண். 11 | 1.ர.தியாகராஜன்<br>2.து.முகமதுஷாபுதீன் | ரூ.2800/–<br>ரூ. 2700/– |
| 3 | எம்.பி.டி ரோடு முதல் மாடி கடை எண். 12 | 1.ர.தியாகராஜன்<br>2.து.முகமதுஷாபுதீன் | ரூ.2800/–<br>ரூ. 2700/– |

**அலுவலக குறிப்பு**

அ) மேற்குறிப்பிட்டுள்ள கடை எண்.10,11 மற்றும் 12 உயர்ந்த ஏலக்கேள்வி தொகை ரூ.2800/–க்கு கேட்கப்பட்டுள்ளது. ஏற்கனவே மேற்படி கடைகளுக்கு வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ.2600/–க்கு ரூ.200/–யை அதிகமாக

<table>
<tr><td></td><td>உள்ளது. எனவே, உயர்ந்த ஏலக்கேள்வி கேட்கப்பட்டுள்ள தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) ஏலம் போகாமல் உள்ள கடைகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3949 /2018/அ3)</td><td></td></tr>
<tr><td>30.11.2018</td><td><u>பொருள் எண்.3032</u><br>இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை பகுதியில் அமைந்துள்ள ஆடு அறுக்கும் தொட்டி கட்டிடத்தை பொதுநிதியின் கீழ் ரூ.2,00,000/– மதிப்பீட்டில் பழுது பார்த்து பராமரிப்பு செய்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண்.2883 நாள் 29.06.2018–ல் அனுமதியளித்துள்ளதின் பேரில், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 31.102018 அன்று வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு. டி. அருணகிரி, ஒப்பந்ததாரர்</td><td>0.05% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.எஸ்.எழில்வாணன், ஒப்பந்ததாரர்</td><td>1.00% மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்கண்டவாறு வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள திரு.டி.அருணகிரி ஒப்பந்ததாரர் அவர்களின் மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>(ந.க.எண். 1606/2018/இ1)</u></td><td>நகரமன்றத் திர்மானம் எண்.3032 அனுமதிக்கப்படுகிறது</td></tr>
<tr><td>30.11.2018</td><td><u>பொருள் எண்.3033</u><br>இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண். 27 துரைசாமி மனைப்பிரிவு பகுதியில் குடிநீர்நிதியின் கீழ் ரூ.1,50,000/– மதிப்பீட்டில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின்விசை பம்ப் அமைத்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண்.2947 நாள் 28.09.2018–ல் அனுமதியளித்துள்ளதின் பேரில், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 31.102018 அன்று வரப்பெற்ற</td><td>நகரமன்றத் திர்மானம் எண்.3033 அனுமதிக்கப்படுகிறது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு. என்.கே. வாசுதேவன், ஒப்பந்ததாரர்</td><td>0.05% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.டி.அருணகிரி, ஒப்பந்ததாரர்</td><td>1.50% மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
2) மேற்கண்டவாறு வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள திரு. என்.கே.வாசுதேவன் ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
<u>(ந.க.எண். 2309/2018/இ1)</u>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.11.2018</td>
<td>
<u>பொருள் எண்.3034</u><br>
இந்நகராட்சிக்குச் சொந்தமான IVPM அருகிலுள்ள 10.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு குடிநீர்நிதியின் கீழ் ரூ.9,90,000/– மதிப்பீட்டில் புதியதாக Spiral Staircase அமைத்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண். 2772 நாள் 29.01.2018–ல் அனுமதியளித்துள்ளதின் பேரில், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 31.102018 அன்று வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு. என்.கே. வாசுதேவன், ஒப்பந்ததாரர்</td><td>0.25% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
</table>
</td>
<td>நகரமன்றத் திர்மானம் எண்.3034 அனுமதிக்கப்படுகிறது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>திரு.டி.அருணகிரி, ஒப்பந்ததாரர்</td><td>1.50% மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u>
1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) மேற்படி பணிக்கென வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள திரு. என்.கே. வாசுதேவன் ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.25% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
<u>(ந.க.எண். 572/2018/இ1)</u>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.11.2018</td>
<td>
<u>பொருள் எண்.3035</u>
இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண். 18 காரை லேபர் ஸ்கூல் தெருவில் பொதுநிதியின் கீழ் ரூ.1,40,000/– மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண்.2900 நாள் 29.06.2018–ல் அனுமதியளித்துள்ளதின் பேரில், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 31.102018 அன்று வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு. எஸ். எழில்வாணன் ஒப்பந்ததாரர்</td><td>0.05% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.டி.அருணகிரி, ஒப்பந்ததாரர்</td><td>1.00% மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u>
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள திரு. எஸ். எழில்வாணன் ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
<u>(ந.க.எண்.1970/2018/இ1)</u>
</td>
<td>நகரமன்றத் திர்மானம் எண்.3035 அனுமதிக்கப்படுகிறது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 30.11.2018 | **பொருள் எண்.3036**<br>இந்நகராட்சிக்குச் சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திற்கு குடிநீர் நிதியின் கீழ் ரூ.9,80,000/– மதிப்பீட்டில் சோடியம் ஹைபோ குளோரைடு சப்ளை செய்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண். 2958 நாள் 28.09.2018–ல் அனுமதியளித்துள்ளதின் பேரில், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 31.102018 அன்று வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. | நகரமன்றத் திர்மானம் எண்.3036 அனுமதிக்கப்படுகிறது |

| வ.எண் | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | ஸ்ரீராஜகணபதி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், ஆவடி, சென்னை | 0.68% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | ஸ்ரீசபரி இன்ஜினியரிங் ஆவடி, சென்னை. | 0.68% மதிப்பீட்டை விட அதிகம். |

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிஅளிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ளவரின் மதிப்பீட்டை விட 0.68% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண்.3158/2018/இ1)**

| | | |
|---|---|---|
| 30.11.2018 | **<u>பொருள் எண்.3037</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சி ஆணையர் அவர்களின் ந.க.எண். 4356/2016/எச்1 நாள் 07.12.2017–ன்படி அரசு பள்ளிகள் மற்றும் நகராட்சி பள்ளிகளில் கழிவறைகள், பள்ளியறைகள் மற்றும் வளாகம் சுத்தம் செய்யும் பணிக்கு பணியாளர்கள் சப்ளை செய்யும் பணி உத்திரவு காலம் 10.12.2018–ம் தேதியுடன் முடிவடைய உள்ளது.<br><br>எனவே, 16.11.2018 ஆம் தேதிய கடிதத்தில் ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்த விகிதத்திலேயே பணி செய்ய தெரிவித்துள்ளதின்படி பொதுசுகாதாரம் மற்றும் நிர்வாக நலன் கருதி 11.12.2018–ம் தேதி முதல் ஓராண்டு காலத்திற்கு ஏற்கனவே பணியாளர்களை சப்ளை செய்துவரும் நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஊதியத்தின் அடிப்படையில் பணி உத்திரவு நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் தோராய செலவனம் ரூ.9,90,000/–க்கு மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>(ந.க.எண்.4356/2018/எச்1)</u>** | நகரமன்றத் திர்மானம் எண்.3037 அனுமதிக்கப்படுகிறது |
| 30.11.2018 | **<u>பொருள் எண்.3038</u>**<br>1959 ஆம் வருடத்திய தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு திடல்கள் மற்றும் திறவிடங்கள் (பாதுகாத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் பிரிவு 5 (3) –ன்படி இந்நகராட்சியில் கல்வி மற்றும் பொதுசுகாதார துறை அரசாணை எண். 361 நாள் 15.03.1966–ல் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்களுக்கான பட்டியலினை அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 524 நாள் 24.05.1988–ல் பூங்கா பட்டியலில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள திரு.வி.கா. பூங்காவினை பூங்கா பட்டியிலில் இருந்து நீக்கம் செய்து திருமண மண்டபத்திற்காக அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 203 நாள் 27.03.1989–ல் பூங்கா பட்டியலி இருந்து நீக்கம் செய்யப்பட்ட இடத்தில் திருமண மண்டபம் கட்ட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தற்பொழுது நகராட்சி பூங்காவாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும், மேற்படி அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் விளையாட்டு திடலுக்காக உள்ள பட்டியலில் வரிசை எண். 2–ல் பாரி கம்பெனி விளையாட்டு மைதான இடத்தினை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 293 நாள் 23.03.1990–ல் சட்டம் பிரிவு 5 (1) –ன் கீழ் ஆரம்ப நிலை திருத்தியதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.<br>1959 ஆம் வருடத்திய பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், திறவிடங்கள் (பாதுகாத்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் பிரிவு 5(3)(பி) –ன்கீழ் மீண்டும் ஆரம்ப அறிக்கை செய்ய அரசின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க உத்தேசித்து இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள பூங்காக்கள், விளையாட்டு திடல்கள் மற்றும் திறவிடங்கள் பட்டியலினை மன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது. (இணைப்பு பட்டியல்)<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) 1959 ஆம் வருடத்திய தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு திடல்கள் மற்றும் திறவிடங்கள் (பாதுகாத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் பிரிவு 5(3) –ன்படி கல்வி மற்றும் பொதுசுகாதாரத்துறை அரசாணை எண். 361 நாள் 15.03.1966–ன்படி | நகரமன்றத் திர்மானம் எண்.3038 அனுமதிக்கப்படுகிறது |

வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.வி.கா. பூங்காவினை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 524 நாள் 24.05.1988–ல் பூங்கா பட்டியலில் இருந்து நீக்கம் செய்து திருமண மண்டபத்திற்காக அரசாணை வெளியிடப்பட்டு மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 203 நாள் 27.03.1989–ல் திருமண மண்டபம் கட்ட அரசாணை வெளியிடப்பட்டு தற்போது நகராட்சி பூங்காவாக பயன்பாட்டில் இருந்து வருவதால் அங்கீகரிக்கப்பட்ட பூங்கா பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) 1959 ஆம் வருடத்திய பூங்காக்கள் , விளையாட்டு திடல்கள், திறவிடங்கள் (பாதுகாத்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் பிரிவு 5(3)(பி ) –ன்கீழ் மீண்டும் ஆரம்ப அறிக்கை செய்ய அரசின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க உத்தேசித்து இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள பூங்காக்கள், விளையாட்டு திடல்கள் மற்றும் திறவிடங்கள் பட்டியலினை மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) 1959 ஆம் வருடத்திய பூங்காக்கள் , விளையாட்டு திடல்கள், திறவிடங்கள் (பாதுகாத்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் பிரிவு 5(3)(பி ) –ன்கீழ் மீண்டும் ஆரம்ப அறிக்கைக்கு பட்டியல் கண்டுள்ளவாறு அறிவிப்பு செய்ய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வழியாக அனுப்ப மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண். 297 /2010/எப்1)**

xxxஒம்./ ஆர்.எஸ்.வெங்கடாசலம்
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ),
இராணிப்பேட்டை நகராட்சி.